மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.99/2021</u>

2025ம் ஆண்டு அக்டோபர் 08ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமாரசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>08.10.2025 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1.1. 1ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் எனது தாயார். 2ம் பிரதிவாதி பார்வதி என்பவர் எனது சகோதரி. இந்த வழக்கின் பிரதிவாதி சேமலைபோயர் என்பவரின் வாரிசுகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நாங்கள் 30/7/2010 தேதியில் ஏற்படுத்திக் கொண்டுள்ள பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் ரீ.ச.எண்.908/2 என்று குறிப்பிட்டுள்ளது வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்ற பரிகாரம் கேட்டு தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் 908/2 என எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்பதே எனக்கு தெரியாது.

2. என் தகப்பனார் பெயர் முத்துசுவாமி கவுண்டர் என்றால் சரிதான் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பாத்திய விடுதலை ஆவணத்தில் ஆவண எண்.2115/1955 கிரைய ஆவணத்தின் அடிப்படையில்

முத்துசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முத்துசாமி கவுண்டர் பெயரிலான கிரைய ஆவணத்தை நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. ரீ சர்வே பட்டா எண்.122, 605, 304 ஆகியவற்றின் அடிப்படையில் பாத்தியம் என பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அந்த பட்டாக்கள் இந்த வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தான காலை எண்.908 ன் பழைய காலை எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பழைய காலை எண் விஸ்தீரணம், ரிசர்வே எண் விஸ்தீரணம் ஆகியவை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.08 19:09:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்